# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 207/நகராட்சி/2018**

**நாள் : 05/01/2019**

**திரு C. ஆரோக்கியசாமி,**
**விழுப்புரம் – 605 602.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்.**
**விழுப்புரம் நகராட்சி,**
**விழுப்புரம்.** – **எதிர் மனுதாரர்**

விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி அஞ்சல், எண்.747, முருகன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு C. ஆரோக்கியசாமி அவர்களின் 04.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 207/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் சமர்ப்பித்த அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி அஞ்சல், முருகன் கோவில் தெரு எண்.747 என்ற முகவரியில் வசிக்கும் திரு C. ஆரோக்கியசாமி என்பவர், விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வழுதரெட்டி கிராமம் புல எண்.22–இல் 1.96.5 ஏர்ஸ் நிலம் மயானப் பயன்பாட்டிற்காக அரசால் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டதென்றும், அம்மயான பூமி ஆக்கிரமிக்கப்பட்டு வீடுகள், கோவில் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளதால், அந்நிலத்தை மயானப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்த இயலாமல் ஆதி திராவிட மக்கள் அவதியுறுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். எனவே, ஆக்கிரமிப்பினை அகற்றத் தவறிய நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதுடன், மயான பூமியில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றித் தர ஆணையிடக் கோரியுள்ளார்.

2. விழுப்புரம் நகராட்சி ஆணையர் தனது 08.11.2018 நாளிட்ட கடிதத்தில் விரிவான அறிக்கைனை சமர்ப்பித்துள்ளார். விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வழுதரெட்டி கிராமம் 31.01.2011 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.33–இன் படி விழுப்புரம் நகராட்சியுடன் இணைக்கப்பட்டதென்றும், இது நாள் வரை மேற்குறிப்பிட்ட கிராமத்திற்கான நில அளவை ஆவணங்கள், கிராமக் கணக்குகள் நகராட்சி நில அளவை பிரிவில் ஒப்படைக்கப்படவில்லை என்றும், எனவே, நகராட்சியின் நகர் சார் ஆய்வரைக் கொண்டு ஆக்கிரமிப்புகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களை கண்டறிய இயலவில்லை என நகராட்சி ஆணயைர் தெரிவித்துள்ளார். மேலும், வழுதரெட்டி கிராமத்தில் உள்ள இடுகாடு மற்றும் சுடுகாட்டில் உள்ள ஆக்கிரமிப்பு விவரங்களை வருவாய்துறையினரிடமிருந்து பெற்று, ஆக்கிரமிப்பு இனங்களில் கோவிலும் இருப்பதால் சட்டம் ஒழுங்கு ஏற்படாமலிருக்கும் வகையில் வருவாய் துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 03.01.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விழுப்புரம் வட்டாட்சியரிடம் மயான ஆக்கிரமிப்பு விவரங்கள் கோரப்பட்டதென்றும், 11 வகையான ஆக்கிரமிப்புகள் உள்ளதாகவும் அவ்வாக்கிரமிப்புதாரர்களுக்கு பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், மயான பூமி ஆக்கிரமித்து கட்டப்பட்ட கோவிலில் வர்த்தக ரீதியில் சூதாட்டம் நடைபெறுவதாகவும் தெரிவித்தார். இரண்டு திங்கள்களுக்கு முன்னர் நகராட்சி ஆணையரிடம் புகார் செய்தும் ஆக்கிரமிப்பினை அகற்ற எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் விசாரணையின் போது குறிப்பிட்டார்.

4. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்களில் வழுதரெட்டி கிராம நில அளவை எண்.22–இல் உள்ள மயானப் புறம்போக்கில் மூன்று ஓட்டு வீடுகளும், நான்கு கூரை வீடுகளும், ஒரு மெத்தை வீடும் தனிநபர்களால் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளன. மேலும், அங்காளம்மன் கோவில் என்ற வழிபாட்டு தலமும் கட்டப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இதைத் தவிர்த்து இரண்டு பொதுக்கழிப்பிடங்களும் அமைந்துள்ளதாகத் தெரிகிறது. உரிய ஆவணங்கள் இல்லாத நிலையில் மயான நிலத்தைக் கண்டறிய இயலவில்லை என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ள நிலையில், எவ்வாறு அப்பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டப்படுவதற்கு நகராட்சி அனுமதி வழங்கியது என்று தெரியவில்லை. பொதுக்கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு முன் அந்நிலத்தின் வகைபாடு மற்றும் அதன் பயன்பாட்டுத் தன்மை குறித்து அறியாமலேயே நகராட்சி மேற்கொண்ட நடவடிக்கை ஏற்புடையதல்ல. நகராட்சியின் மேற்படி நடவடிக்கை மிகவும் கண்டிக்கத் தக்கது. மேலும், மயான பூமியில் வீடுகள் மற்றும் கோவில் பல ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இந்நிலையிலும் அவ்வீடுகள் மற்றும் கோவில் எந்தவகைப்பாட்டான நிலத்தில் கட்டப்பட்டுள்ளன என்பது குறித்தும் கண்டறிய நகராட்சி ஆணையர் எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் மயான பூமி ஆக்கிரமிப்பு குறித்து முறையீடு செய்த பின்னரே வருவாய் துறையினரிடமும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிகிறது. எனவே, வருவாய் துறையின் உதவியுடன் மயான பூமியின் நில அளவை கண்டறிந்து, வீடுகள் மற்றும் கோவில் ஆக்கிரமிப்புகளை அகற்ற உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. மேலும், அமரத்துவம் அடைந்தவர்களை அடக்கம் செய்யும் இடத்தில் பொதுக்கழிப்பிடங்களை அமைப்பதையும் அனுமதிக்கலாகாது எனவும் அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2019**–ஆம் ஆண்டு, **ஜனவரி** திங்கள், **5**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

10/1/2019

செயலாளர்.

9.1.19

10/1/19

பெறுநர்

1. திரு C. ஆரோக்கியசாமி,
   747, முருகன் கோயில் தெரு,
   வழுதரெட்டி அஞ்சல்,
   விழுப்புரம் – 605 602.

2. நகராட்சி ஆணையர்.
   விழுப்புரம் நகராட்சி,
   விழுப்புரம்.
   விழுப்புரம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி